## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை - 2016

---

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினது 3 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 பெப்ரவரி 08 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் நிதிச்செயலாற்றல் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7**

நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 1,760,458,764 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாக தேய்மானத்திற்குள்ளாகியபோதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, உருவாகிய மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 3 க்கமைய மீளாய்வு செய்வதகு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 9**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 270,037,438 பெறுமதியான எஞ்சிய கையிருப்பைப் பெறுமதியிடுவதற்குப் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பின்னரான ஊழியர் நலன்களுக்கான நிதியேற்பாடாக ரூபா 449,499,047 காட்டப்பட்டிருந்தபோதும், அந் நிதியேற்பாடு சம்பந்தமான கணக்கீட்டுக் கொள்கை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கைதவிர்ப்புச் சபையால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 23,999,790 கிரயமுடையதும் 3,892 கூறுகளைக் கொண்டதுமான முற்றாக தேய்மானத்திற்குள்ளான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுடன் கட்டிடப் பொருட்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றினது உள்ளவாறான கிரயமும் திரண்ட தேய்மானமும் இனங்காணப்பட்டுக் கணக்கிலிருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பின்னரான ஊழியர்களது நலன்பொருட்டு, சேவைக்காலத்திற்கேற்ப, ஆரம்பச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவும் படியும் சேர்த்துக்கொள்ளப்பட்டு அதில் அரைவாசிக்கு நிதியேற்பாட்டை மேற்கொள்வது தற்போது கடைப்பிடிக்கப்படும் முறையாகும். அது தொடர்பான பரீசீலனையின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

(i) மீளாய்வாண்டிற்கு முன்னரான ஆண்டுகளில் ஓய்வு பெற்ற 3 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை நலனாக ரூபா 1,004,992 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின்போது ஒரு ஊழியருக்கு வழங்கப்பட்ட ரூபா 168,121 பணிக்கொடையானது கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத 2 ஊழியர்கள் மீளாய்வாண்டின்போது ஓய்வு பெற்றிருந்தனர். அவர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடையாகிய ரூபா 691,645 முன்னைய ஆண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்படாது பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iv) முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத ஏனைய 30 ஊழியர்களின் பொருட்டு மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 6,062,715 பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அதில் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 5,276,554 முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பணியாற்றியவாறிருந்த 2 ஊழியர்களின் பொருட்டு மீளாய்வாண்டிற்கான ரூபா 808,897 பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) மீளாய்வாண்டில் 84 ஊழியர்களது பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 1,845,812 கூடுதலாகக் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(vii) மூன்று ஊழியர்களது பணிக்கொடையில் இடர்க்கடன் மீதியாகிய ரூபா 395,867 மற்றும் விழா முற்பணமாகிய ரூபா 21,750 என்பன கழிக்கப்பட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டபோதும், கழித்துக் கொள்ளப்பட்ட கடனும் முற்பணமும் கணக்கிலிடப்படவில்லை.

(viii) இரு ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 334,557 பணிக்கொடையை முன்னைய ஆண்டின்போது கொடுப்பனவு செய்கையில் கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கணக்கில் வரவு வைக்காது பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கணக்கும் நிதியேற்பாட்டுக் கணக்கும் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ix) மீளாய்வாண்டின்போது சேவையிலிருந்து விலகிய ஊழியர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியப் பணிக்கொடையாகிய ரூபா 525,490 இடர்க் கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் இடர்க் கடன் கணக்கும் பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின்போது விடுதி வசதிகளுடனான நோயாளர் அறைகளில் இருந்தோரிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியாகிய ரூபா 3,115,280 விடுதி வசதிகளுடனான நோயாளர் அறை வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படாது அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மூலதன நிதியேற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பொருட்டு முன்னைய ஆண்டின்போது சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது தேய்மானம் ரூபா 18,095,030 குறைவாகப் கணக்கிலிடப்பட்ட தவறானது மீளாய்வாண்டின்போது திருத்தஞ் செய்யப்பட்டிருந்த போதும், அதற்கு சமமாகச் சொத்துக்கள் காலக் கழிவுக்குள்ளாகவில்லை.

(உ) மீளாய்வாண்டின்போது கட்டிடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றினது தேய்மானம் ரூபா 93,756 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஊ) தொழில்சார் கட்டணங்களுக்கு அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் வரியை இனங்கண்டு அறவிட்டிராததுடன், அதற்குப் பதிலாக பெற வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கு மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய வரிக்கணக்கிற்கென மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 8,500,000 என்பன முறையே வரவு மற்றும் செலவாக ஆக்கப்பட்டிருந்தன.

(எ) காசுப்பாய்ச்சல் கூற்று சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட வேண்டிய சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களது தேய்மானமாகிய ரூபா 243,786,065 ரூபா 257,076,160 ஆகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்கான சீராக்கலாக ஆண்டிற்கான இலாபத்தில் ரூபா 15,104,017 தவறுதலாகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 535,040,707 ஆகும். எவ்வாறாயினும், அதில் ஆண்டின்போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட 04 மோட்டார் வாகனங்களது கிரயமாகிய ரூபா 5,166,900 கழிக்கப்பட்டு எஞ்சிய ரூபா 529,873,807 மாத்திரம் வெளிச் சென்ற காசுப் பிரவாகமாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், அந்த 04 மோட்டார் வாகன விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 5,267,060 உள்ளே வந்த காசுப் பிரவாகமாகக் காட்டப்படவில்லை

(ஏ) மீளாய்வாண்டின்போது சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு செலவிட்ட ரூபா 5,497,570 சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக மீண்டுவரும் செலவினமாகக் கருதப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் நன்கொடையாகப் பெறப்பட்ட 389 கூறுகளையுடைய உபகரணங்களது பெறுமதியைக் கணிப்பிட்டு அவற்றைக் கணக்கிலிடவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 25,359,934 பெறுமதியுடைய Incinerator இயந்திரத்தின் கிரயம் மின்சார உபகரணங்கள் (Electrical Equipment) கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஏனைய கட்டிடங்கள் (other Bulidings) கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் கணக்கிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதிக்குமிடையே ரூபா 778,874,210 கூட்டுத் தொகையுடைய வித்தியாசமிருந்தபோதும், வித்தியாசத்திற்கான காரணம் விளக்கப்படவில்லை.

| | கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள்/பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | 2006 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு | கணனி முறைமையில் உள்ளடங்கிய கையிருப்புப் பேரேடு | 243,908,511 | 945,610,170 | 701,701,659 |
| (ஆ) | வைத்தியசாலைக் கட்டண வருமானம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கணனி முறைமையில் உள்ளடங்கியிருந்த வைத்தியசாலைக் கட்டண வருமானத்தை வகைப்படுத்தல் | 1,782,161,942 | 1,716,661,796 | 65,500,146 |
| (இ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்பட செய்ய வேண்டிய இடர்க் கடன் | கணனி முறைமையில் உள்ளடங்கிய விரிவான இடர்க் கடன் அறிக்கை | 154,018,179 | 145,639,273 | 8,378,906 |
| (ஈ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் | வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 101,254,073 | 101,242,256 | 11,817 |
| (உ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை | 199,061,610 | 202,343,292 | 3,281,682 |
| | | | | | 778,874,210 |

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாகப் பரீசீலிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ முடியவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கணணி முறைமைக்கேற்ப வைத்தியசாலையின் 5 பிரிவுகளது ஆண்டின் இறுதியிலான கையிருப்பு | (1,137,150,035) | கணணி முறைமைக்கேற்ப கையிருப்பில் எதிர்மறைப் பெறுமதி ஏற்பட்ட விதம் மற்றும் கணனி முறைமைத் தகவல்களை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்றுகள். |
| (ஆ) | கடன் கொடுத்தோர்<br>வைத்தியசாலைக்கட்டணக் கடன்பட்டோர் | (22,139,133)<br>(29,157,006) | கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் மீதிகளில் எதிர்மறைப் பெறுமதியேற்பட்ட விதம் மற்றும் கணணி முறைமையில் உள்ள தகவல்களது பிழையற்ற தன்மையை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்று |
| (இ) | சத்திர சிகிச்சைப் பொருட்கள் | 199,116,129 | கணணி முறைமையில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கணக்கிலிருந்து சத்திர சிகிச்சைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கணக்கிற்கு மாற்றஞ்செய்யப்பட்ட பொருட்களை இனங்காண்பதற்கான ஆவணச்சான்று |
| (ஈ) | உள்ளவாறான கையிருப்பு (Virtual stock) | - | கையிருப்பில் உள்ளடங்கிய உள்ளவாறான கையிருப்பு வகைகள், அவற்றினளவு மற்றும் பெறுமதி என்பவற்றை இனங்காண்பதற்கான ஆவணச்சான்று. |

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை இராணுவத்திடமிருந்தும் இலங்கை கடற்படையிடமிருந்தும் 07 ஆண்டுகளாகப் பெற வேண்டியதாகவுள்ள வைத்தியசாலைக் கட்டணமாகிய ரூபா 4,137,333 அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணமாகிய ரூபா 3,616,142 தீர்த்து வைக்கப்படுவதற்கோ அல்லது வருமானமாக இனங் காணப்பட்டுக் கணக்கிலிடப்படுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | கட்டணம் செலுத்தப்படும் வார்ட்டுக்களில் உள்ள நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு நோயாளிகளிடமிருந்து அறவிடப்படும் தொழில்சார் கட்டணத்தின் மீதான உழைக்கும்போதே செலுத்தும் வரியை அறவிட்டு அதனை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாயினும், 2016 சனவரி முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 45,954,202 மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய உழைக்கும்போதே செலுத்தும் வரி அறவிடப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 756(2) (ஆ) | மெய்மையாய்வு செய்யப்படும் பொருட்கள் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் மெய்மையாய்வுச் சபையில் நியமிக்கப்பட வேண்டுமாயினும் 2015, 2016 ஆம் ஆண்டுகளின் போது சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையில் அவ்வுபகரணங்கள் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. மேலும், வைத்தியசாலைக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டு செயற்பட்டவாறிருந்த 5 மின்தூக்கிகளில் குறைபாடுகள் நிலவியதும் தொடர்ந்து பயன்படுத்த முடியாதிருப்பதும் அவ்வாறு பயன்படுத்துவது அபாயகரமானது என்பதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் அடங்கிய மெய்மையாய்வுச் சபையால் சிபார்சு செய்யப்படாதும் பெறுமதி கணிக்கப்படாததும் அம்மின்தூக்கிகள் அகற்றப்பட்டு அவை ரூபா 737,220 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 757(2) | நேரடிச் சரி, பிழை பார்த்தலின்போது இனங்காணப்பட்ட கையிருப்புக் குறைவு, மிகை, இணக்கமின்மை, இழப்புகள் என்பன தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து விசாரித்தறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன், அது தொடர்பாகக் கணக்களி உத்தியோகத்தர் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும். எவ்வாறாயினும், கணணி முறைமையிலுள்ள கையிருப்புப் பேரேடுகளில் உள்ளவாறான கையிருப்புகள் (Virtual stock) உள்ளடக்கப்பட்டிருப்பதால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்புக் குறைவு, மிகை, இணக்கமின்மை, இழப்புகள் என்பவற்றை இனங்காண முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 770(3) | கொள்வனவு செய்யப்பட்ட விலை ரூபா 3,000 க்குக் குறையாததொரு பொருளை அழித்துவிடுமாறு பொருள் மெய்மையாய்வுச் சபை பரிந்துரை செய்யுமிடத்து, அது தொடர்பான தேர்ச்சியுள்ள சுயாதீன உத்தியோகத்தர் ஒருவரது கருத்தைக் கோர வேண்டுமாயினும், அவ்வாறல்லாது மீளாய்வாண்டின்போது சத்திர சிகிச்சை உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பன கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தன. |
| (இ) | 2007 மார்ச் 09 ஆந் திகதிய 133 ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2008 டிசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பன | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய அதி கூடிய இடர்க் கடன் ரூபா 250,000 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது 135 ஊழியர்களுக்கு அவ்வரம்பிற்கு அதிகமாக ரூபா 259,660 தொடக்கம் ரூபா 384,639 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட கடன்களது கூட்டுத் தொகை ரூபா 7,155,924 ஆகும். அவ்வாறே, 2017 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாதங்களின்போது மேலும் 105 ஊழியர்களுக்கு ரூபா 258,114 முதல் ரூபா 399,346 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதி கூடிய கடனுக்குரிய வரம்பை அதிகரித்திருந்த தொகை ரூபா 6,758,503 ஆகவுமிருந்தது. |
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை, 2015 யூன் 26 ஆந் திகதிய 18/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 13 ஆந் திகதிய 18/2015 (i) ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அரசாங்க சேவையில் உள்ள நிறைவேற்றுதர உத்தியோகத்தர்களுக்கு விசேட படி வழங்கப்பட்டிருந்தபோதும், அந்தப் படியை கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு ஏற்புடையதாகச் செய்யும் சம்பள மற்றும் ஊழியர் நிர்ணய ஆணைக்குழுவினது சிபார்சும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரமும் பெறப்படாது அவ் விசேட படி வைத்தியசாலையின் 8 நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 யூலை 01 முதல் 2016 டிசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின்போது அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 616,500 ஆகும். |
| (உ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின்போது ரூபா 5,166,900 புத்தகப் பெறுமதியுடைய 04 வாகனங்கள் ரூபா 5,267,060 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும், அந்த 04 வாகனங்களும் கைதவிர்ப்புக்குப் பொருத்தமானவை என இயந்திரப்பொறியியலாளர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருடனான 03 உத்தியோகத்தரடங்கிய விசேட கொள்வனவுச் சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப / இயந்திரவியல் உத்தியோகத்தரை உள்ளடக்கிய குழு ஒன்றினால் அவ்வாகனங்களது அதி குறைந்த விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த 04 வாகனங்களும் கூறு விலைகள் கோரப்பட்டு |

விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை சுற்றறிக்கையின் 10 ஆந் பந்தியின் பிரகாரம் திரட்டு நிதியில் செலவு வைக்கப்படவுமில்லை. மேலும், வாகன விற்பனை விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படவுமில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் பற்றாக்குறை ரூபா 175,818,974 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 352,618,183 ஆகும். இதனால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 176,799,209 அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டினது வைத்தியசாலைச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 636,319,584 அதிகரித்திருந்தது. எனினும், ஆண்டினது வருமானமும் ரூபா 818,636,117 அதிகரித்திருப்பானது மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யின், 2012 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையும் 2013,2014 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையும் ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2012 முதல் 2014 வரை சபையின் பங்களிப்பு ரூபா 716,896,615 முதல் ரூபா 1,739,662,005 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளானபோதும், 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 950,142,035 வரை குறைவடைந்திருந்தது. எனினும், மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 1,305,091,352 வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 354,949,317 அதிகரிப்புமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உயர் தார்மீக ரீதியாகவும் நியமங்களுடனும் சிறப்பானதும் பாதுகாப்பானதுமான நோயாளிகளைப் பராமரிக்கும் சேவையை வழங்குதலே வைத்தியசாலையின் தொலை நோக்காவதுடன், அதனை ஈடேற்றுவதற்கெனத் தயாரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடடிக்கைத் திட்டம், பொருட்கொள்வனவுத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செய்தித் திரட்டின் (Bulletin) பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலையின் ஒட்டு மொத்தக் கட்டில் பாவனை 63.4 சதவீதம் முதல் 68.8 சதவீதம் வரை அதிகரித்திருந்தபோதும், தற்போதுள்ள 24 வார்ட்டுகளில் 8 வார்ட்டுகளில் உள்ள கட்டில்களது பாவனை 48.5 சதவீதம் தொடக்கம் 4.8 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், Physiotheraphy Service, Pathological Service, Endoscopy Test மற்றும் E.C.G Tests என்பவற்றிற்குட்படுத்தப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 141 சதவீம், 19 சதவீதம், 11 சதவீதம், 17 சதவீதம் என அதகரித்திருந்ததுடன் அது நன்மை தரும் போக்குடையதாகவுமிருந்தது.

(இ) வைத்தியசாலைக்கென நிதிசார் மற்றும் நிர்வாகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிக்கு 2014 தொடக்கம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் பொருட் கொள்வனவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அதற்கென ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டுமிருந்தது. இந்நிர்மாண வேலை மீளாய்வாண்டின்போது முடிவுறவிருந்த போதும், 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெறும் வைத்திய உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மருந்துப் பொருட்கள், ஏனைய பொருட்கள் என்பவற்றை ஆவணப்படுத்தும் விதி முறைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அமுலாக்கப்படாதிருந்தன. வைத்தியசாலையின் 28 பல்வேறு பிரிவுகளிலும் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நன்கொடையாகப் பெறப்பட்ட அவ்வாறான 389 உபகரணங்களது பெறுமதியைக் கணிப்பிட்டு அவற்றை நிலையான சொத்துப் பதிவேடு, பொருட் பதிவேடு மற்றும் கையிருப்புப் பதிவேடு என்பவற்றில் முறைப்படி உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சுகாதாரக் கல்விப் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைப்பதற்காக ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலை மற்றும் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுக்கிடையே கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் 2016 மே 09 ஆந் திகதி முடிவடைந்ததன் பின்னர் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சு அப்பொறுப்பிலிருந்து விலகியிருந்தது. அந்நிறுவனத்தில் கல்வி கற்றவாறிருந்த முதல் இரண்டு தொகுதிகளது கற்கை நெறி முடிவடையும் வரை தொடர்ந்து அதனை நடாத்துவதற்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை அதன் நிர்வாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வைத்தியசாலை செலவிடும் சகல தொகையையும் மாதாந்தம் சுகாதார அமைச்சின் மூலம் மீளளிப்புச் செய்வதற்குமான அடிப்படையில் சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சரது ஆலோசனைப்படி அது தொடர்ந்து நடாத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந் நிறுவனத்தின் பொருட்டு 2016 டிசெம்பர் 31 வரை வைத்தியசாலை செலவிட்டிருந்த ரூபா 3,808,586 சுகாதார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதமளவிலும் மீளளிக்கப்படாதிருந்தது.

(இ) ஒவ்வொரு பிரிவுக்குமிடையே வைத்தியசாலை பதவியணியினரை உள்ளக இடமாற்றத்திற்குள்ளாக்கும் குறிப்பிட்டதொரு கொள்கை அல்லது விதிமுறையை இனங்கண்டு அதனை அமுலாக்குவதற்கு 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 10 ஆண்டுகளுக்கு அதிகமாக அல்லது ஒரே பிரிவில் அல்லது ஒரே வேலை நிலையத்தில் பணியாற்றியவாறிருக்கும் பதவியணியினர் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு

| வேலைத் தொகுதி | எண்ணிக்கை |
|---|---|
| தாதியர் | 71 |
| ஓடலிகள் | 115 |
| முகாமைத்துவ உதவியாளர் | 25 |

ஒரே துறையில் அல்லது பணியில் மாத்திரம் பெறப்படும் நிபுணத்துவம் காரணமாக, உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வேறு பிரிவுகளில் பணியாற்ற இயலாதிருத்தல் இல்லாதிருத்தல், பதவிக்கேற்ப ஒவ்வொரு பிரிவினதும் பணி தொடர்பாகச் சகல உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பெற வேண்டிய அறிவைப் பெற முடியாது போதல், பதவியணியினரை நிர்வகிக்க இயலாதிருத்தல், ஒட்டுமொத்த உள்ளக நிர்வாக முறைமையும் நலிவடைதல் போன்றன உருவாக இது ஏதுவாகலாம் என அவதானிக்கப்பட்டது.

(ஈ) இருதய நோய் சிகிச்கைக்காக அரசாங்க வைத்தியசாலையிலிருந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் நோயாளிகளின் செலவினப் பட்டியல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையால் வைத்தியப் பிரிவிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்களது விலைப்பட்டியல்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன இது தொடர்பாக சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சுடன் 2009 தொடக்கம் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது அரசாங்க வைத்திய சாலைகளிலிருந்து இருதய சிகிச்சைக்காக அனுப்படும் நோயாளிகளுக்கான விதிமுறை மற்றும் அதன் பொருட்டு சுகாதார, போசனை தேசிய வைத்திய அமைச்சினது அங்கீகாரத்தை உறுதி செய்வதற்கான விதி முறை மற்றும் விலைப் பட்டியலைத் தீர்த்து வைப்பது மற்றும் எதிரீடு செய்தல் போன்ற விதி முறைகளை உள்ளடக்கியவாறு இருதரப்பினருக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் அவ்வாறானதொரு உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. இதற்கமைய, முறையான விதிமுறை இல்லாமலேயே நோயாளிகள் இவ்வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைச் செலவினத்திற்குப் புறம்பாக பரிசோதனைக் கட்டணமும் வைத்திசாலையினது செலவுக்கான பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்நோயாளிகள் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலம் அதிகரிப்பதால் செலவுக்காள பட்டியலும் அதிகரித்திருந்தது. எனினும், அவ்வாறான மேலதிகச் செலவை எதிரீடு செய்வதற்கு வைத்தியப் பிரிவின் இணக்கம் பெறப்பட்டிராததுடன், 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த வைத்தியசாலைக் கட்டணமாகிய ரூபா 260,636,619 மீளாய்வாண்டின்போது வைத்திய வழங்கற் பிரிவுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பெறுமதியில் எதிரீடு செய்யப்படுவதற்கு வைத்தியசாலை ஒருதலைப்பட்சமாக நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக வைத்திய வழங்கற் பிரிவு அந்த எதிரீட்டை மேற்கொண்டிருந்தது.

(உ) கட்டணம் செலுத்தப்படும் வார்ட்டுகளில் உள்ள நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு நோயாளிகளிடமிருந்து தொழில்சார் கட்டணத்தை அறவிட்டு அக் கட்டணத்தில் 99.85 சதவீதத்தைச் சத்திர சிகிச்சையில் பங்குபற்றிய விசேட வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், உதவிப் பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின்போது மாத்திரம் அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்தத் தொழில்சார் கட்டணம் ரூபா 309,427,740 ஆகும். இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) சாதாரண கடமை நேரங்களுக்கு அப்பால் விசேட வைத்தியர்கள் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தபோதும், அறவிடப்படக் கூடிய தொழில்சார் கட்டணம் அல்லது அது கணிப்பிடப்படும் விதம் தொடர்பாகக் குறிப்பிட்டதொரு விதிமுறை முகாமைத்துவதால் தயாரிக்கப்படவில்லை. அத்துடன், குறித்த விசேட வைத்தியர் தனது தற்றுணிபுக்கமைய கட்டணம் அறவிடுவதைத் தீர்மானித்துமிருந்தார்.

(ii) விசேட வைத்தியரைத் தவிர சத்திர சிகிச்சைக்குத் தோற்றும் ஏனைய வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் உதவிப் பதவியனியினருக்கும் தொழில்சார் கட்டணத்தை வழங்குவதற்கோ அல்லது அதனை அறவிடவோ எதுவித அதிகாரமோ இல்லாதிருக்கையில் 2016 சனவரி 01 முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது அவர்களுக்குத் தொழில்சார் கட்டணமாக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 77,925,691 ஆகும்.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2016 சனவரி 01 முதல் 2016 செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதியின்போது சத்திர சிகிச்சை உப களஞ்சியத்திலிருந்து 8 சத்திர சிகிச்கைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,707,922 மொத்தத் கிரயமுடைய மருந்துப் பொருட்களும் சத்திர சிகிச்சைப் பொருட்களும் வைத்தியசாலைக் கட்டணத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, சத்திர சிகிச்சைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டிராத 609 சத்திர சிகிச்சைப் பொருட்களது மொத்தக் கிரயமாகிய ரூபா 238,304 வைத்தியசாலைக் கட்டணமாக நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

## 4.4 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) C இலக்கக் கட்டிடத்தில் உள்ள 22 கழிவறைகளைப் பழுதுபார்ப்பதற்கான மதியுரை மற்றும் நிர்மாணப் பணியைக் கட்டிடத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தபோதும், அதற்கான பொருட் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. அத்திணைக்களம் தயாரித்த பொறியியல் மதிப்பீடு ரூபா 122,771,550 ஆகும். 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வேலையை ஆரம்பிப்பதற்கு முற்பணமாக ரூபா 8,000,000 அத் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 மே 20 ஆந் திகதியளவிலும் நிர்மாணப் பணியில் போதிய செயலாற்றல் இல்லாதிருந்தமையால் அவ்வொப்பந்தத்தை வைத்தியசாலை இரத்துச் செய்திருந்தது. எனினும், கட்டிடத் திணைக்களம் அது வரை மேற்கொண்ட வேலைகளுக்கான விலைப்பட்டியலைப் பெறவதற்கும் முற்பணமாக வழங்கப்பட்ட தொகையைத் திர்த்து வைப்பதற்கும் 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ)

(i) இருதய நோய்ப் பிரிவினது நட்டத்தில் Aluminium Sun Shades களைப் பொருத்துவதற்கான பொறியியலாளர்களின் மதிப்பீடு ரூபா 3,286,800 ஆகும். இவ்வொப்பந்தத்தின் போது 52 சதவீதத்திற்கும் குறைவாக ரூபா 1,556,775 உடைய அதி குறைந்த கூறு விலை தொடர்பாக பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.9.11 பிரிவின் பிரகாரம் விரிவான மதிப்பாய்வை மேற்கொள்ளாதும் ஒப்பந்தத்திற்கான வீதத்திற்கான (Rate) பகுப்பாய்வைப் பெறாமலும் மேலதிக செயலாற்றல் பிணை முறையைப் பெறாமலும் ஒப்பந்தக்காரர் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ii) இரண்டாவது அதி குறைந்த கூறு விலையாகிய ரூபா 3,278,550 ஆகும். இதனைச் சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கு ஒப்பந்தத்தை வழங்கக் கூடியதான வாய்ப்பு இருந்த போதும் மீண்டும் கூறு விலைகளைக் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டு அதிகுறைந்த விலையான ரூபா 3,385,800 ஐச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை வழங்கியமையால் விலை ரூபா 107,250 ஆக அதிகரித்திருந்தது.

(இ) வைத்தியசாலையின் விவாகமாகாத வைத்தியர்களது உத்தியோகபூர்வ மனைகளது அறைகளுக்கு மைபூசி குளியலறையையும் கூரையில் உள்ள சீலிங்கிற்கும் பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொள்வதற்கான ரூபா 4,002,270 பெறுமதியுடைய ஒப்ந்தம், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியின் 5 சதவீத மற்றும் செயலாற்றல் பிணை முறி என்பன பெறப்படாது வழங்கப்ட்டிருந்தது. கூறு விலைக் கோரலுக்கான 12 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் 2015 டிசெம்பர் 20 ஆந் திகதியளவில் ஒப்பந்தத்திற்கான வேலை முடிவடைந்து ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், 2016 மே 23 ஆந் திகதி வேலை நிறைவேறி தாமதக் கட்டணம் அறவிடப்படாது மொத்தத் தொகையும் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) பழைய கட்டிடத்தில் உள்ள 2 Hitachi குளிரூட்டி இயந்திர பழுதுபார்த்தலுக்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,250,000 ஆகும். இதற்கான பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையில் ஈடுபடாது 2015 செப்டெம்பர் 28 ஆந் திகதியன்று பழுதுபார்த்தல் வேலை தனியார் நிறுவனம் ஒன்றியம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(உ) பொருட்கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குப் திட்டமிடப்பட்ட செயலமர்வுகள் (Work Shop), கட்டிட நிர்மாண வேலைகள் என்பவற்றிக்குத் தேவையான ரூபா 80 மில்லியனுக்கான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், பொருட் கொள்வனவு நடவடிக்கைகளது தாமதம் காரணமாக ஒப்பந்தத்தை வழங்கப்படுத்துவது ஆவது 2016 நவெம்பர் 09 வரை தாமதமாகியிருந்ததுடன் அத் தினத்தன்று ரூபா 96.5 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான கடிதத்தின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் 2017 சனவரி 30 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஏப்ரல் 29 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 செப்டெம்பர் 13 ஆந் திகதியளவிலும் நிதிசார் மற்றும் உருப்படிச் செயலாற்றல் என்பன முறையே ரூபா 27,131,481 மற்றும் 10 முதல் 12 சதவீதம் வரையினதாக இருந்தது.

(ஊ) பொருட் கொள்வனவுத் திட்டத்திற்கமைய 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட ஆண்டு தாதியர்களுக்கான விடுதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான ரூபா 100 மில்லியனுக்கான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பொருட் கொள்வனவுச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு 2016 செப்டெம்பர் 09 வரை தாமதமாகியதுடன், 2017 பெபரவரி 16 ஆந் திகதியன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2017 ஒக்டோபர் 31 வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்தது. மேலும், வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம் (Mobilization Advanced) ஆக ரூபா 12,945,941 வழங்கப்பட்டிருந்தது. இந் நிர்மாணப்பணி 2018 யூன் 27 திகதியளவில் நிறைவடைய வேண்டிய போதும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கட்டிடத்திற்கான அத்திவாரமேனும் நிறைவேறாதிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 4,118,100 செலவில் நரம்பு சத்திரசிகிச்சைக் கூறுக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட 159 சத்திரசிகிச்சைப் பொருட்கள் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று காலாவதியாகியமையால் மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புக்குள்ளானது. முன்னைய ஆண்டுகளது பொருள் நுகர்வுப் போக்கை முறையாக ஆய்வு செய்யலாமலும் தேவையை இனங்காணாமலும் இப் பொருட்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பரீசீலனைகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் போது பொது முயற்சிகளுக்கான கணக்குக் குழு பணிப்பு விடுவித்திருந்த போதும் அவ்வாறான பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 களஞ்சியங்கள், 9 வார்ட்டுகள், வைத்தியசாலையின் ஏனைய 4 பிரிவுகள் என்பவற்றில் காலாவதியாகியிருந்த மருந்துப் பெறுமானமும் சத்திர சிகிச்சைப் பொருட் கையிருப்புகளதும் மொத்தக் கிரயம் ரூபா 449,294 ஆகும். 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் அவற்றை முறையாக அழித்து, புத்தகங்களிலிருந்து பதிவுகளை நீக்கியிருக்கவில்லை.

(இ) தேவைகளைச் சரிவர இனங்காணாது கதிர் இயக்கப் பிரிவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 190 Micro Bar Enema Kit பெக்கட்டுக்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மெதுவாக நகர்ந்தவாறிருந்தன. அதில் 140 பெக்கட்டுக்கள் 2017 யூலை மாதமளவில் காலாவதியாக இருந்தன. 60 பெக்கட்டுக்கள் இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு 2017 மார்ச்சில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் ரூபா 108,000 கிரயமுடைய 40 பெக்கட்டுக்கள் காலாவதியாகி இருந்தன.

### 4.6 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 பெப்ரவரி 10 மற்றும் 2017 யூன் 09 ஆந் ஆகிய இணக்கங்களில் நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டங்களில் வைத்தியசாலையின் பணிப்பாளரது பிரதான கணக்காளரதும் பதவிகளில் நிலவிய வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு சுகாதார, போசனை மற்றும் தேசிய வைத்திய அமைச்சு நேரடித் தலையீட்டுடன் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுவிக்கப்பட்டிருந்த போதும், 2017 டிசெம்பர் 31 வரை பணிப்பாளர் மற்றும் பிரதான கணக்காய்வாளர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு அதுவரை வைத்தியசாலையில் பணியாற்றவாறிருந்த பெண் வைத்தியர் ஒருவா 2013 யூலை 08 தொடக்கம் நியமிக்கப்பட்டிருந்தார். பதவிற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய, வைத்திய நிர்வாகத்தில் 7 ஆண்டுகால அனுபவம், ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின்படிப்பு மற்றும் 45 வயதுக்குக் குறைவாக இல்லாது இருத்தல் ஆகிய தொகைகளை அப்பதவி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தர் கொண்டிருக்கவில்லை. மேலும், தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.4.1 அம் பிரிவின் பிரகாரம் குறித்த தகைமைகளைப் பெறுவதற்கான பரீட்சை ஒன்றிலோ அல்லது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி அடையாமை காரணமாக தமக்குரிய நிரந்தர பதவிக்கான சம்பள அளவுத்திட்டத்தை அதிகரித்தவாறு சித்தியடையாத அவ்வுத்தியோகத்தரை உயர் பதவியில் பதில் கடமையாற்ற நியமிக்கப்படலாகாது எவ்வாறாயினும், வினைத்திறமைகளால் தடைப்பரீட்சையில் சித்தியடையதாலால் 12 ஆண்டுகளாக சம்பள ஏற்றத்தைப் பெறுவதற்கும் தவறியிருந்த அவருக்கு அப்பதவி வழங்கப்பட்டிருந்தது. மேலும், பிறிதொரு பதில் கடமையாற்றுவதற்கான நியமனத்தைப் பெறுவதற்கான கடிதத்தை முறையாகப் பெற்றிராதிருந்தும் 2013 யூலை 08 முதல் 2017 சனவரி 31 வரையான காலப்பகுதியின் போது பதில் கடமையாற்றுவதற்காக ரூபா 1,827,893 வழங்கப்பட்டிருந்தது.

(இ) வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவிக்கு முறையான நியமனக் கடிதத்தைப் பெற்றிராத வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் 2015 மார்ச் 04 தொடக்கம் அப்பதவியை பொறுப்பேற்றிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 வரை வைத்தியசாலையின் சகல முகாமைத்துவ மட்டத் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் பங்கேற்றிருந்தார் முறையான நியமனக் கடிதம் இல்லாதிருந்தும் அது கருத்திற் கொள்ளப்படாது பணிப்பாளர் பதவியின் ஆரம்ப சம்பளம் மற்றும் பதவிக்குரிய ஏனைய சகல படிகளையும் வழங்குவதற்குப் பணிப்பாளர் சகல அங்கீகாரம் வழங்கியிருந்தமையால் மேற்படி காலப்பகுதியின்போது அவ்வுத்தியோகத்தருக்குச் சம்பளமும் படியுமாக

மொத்தமாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 5,903,431 ஆகும். பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் வைத்திய நிர்வாகத்தில் 7 ஆண்டு கால அனுபவ மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின்படிப்பு போன்ற தகைமைகள் பதவியேற்பின் போது அவருக்குமில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

ஐந்து ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அக் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் திட்டம் தயாரிக்கப்படவில்லையெனவும் பின்வரும் அவதானிப்புகளின் மூலம் உறுதியானது.

(அ) 2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்கென தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அமுலாக்கப்பட வேண்டிய, வைத்தியர்களுக்கான போசன காலையை அமைத்தல், இருதய நோயாளர்களுக்கென உயர் தரத்திலான ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல், மற்றும் குழந்தைகளது அவசர சிகிச்சைப்பிரிவின் முன்னேற்றம் போன்ற பணிகள் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாத மத்திய குளிரூட்டி முறைமையை மீண்டும் அமைத்தல், மின் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல், பயணிகளது மின் தூக்கிகைகள் கொள்வனவு செய்தல் போன்ற பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் நாளதுவரையாக்கப்படாது மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பயடகின்றன.

(அ) நோக்குடனான ஒவ்வொரு பணிக்குரிய மதிப்பிடப்பட்ட கிரயம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்த்த இலக்கு மற்றும் நோக்கம் என்பவற்றை அடைவதற்கான செயல் முன்னேற்றத்துடன் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அதன் பொருட்டுக் செலவிடப்பட்ட தொகையையும் இனங்காணும் விதத்தில் காலாண்டுக் செயல் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து அவற்றின் பிரதிகளை 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த அமைச்சிற்குப் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் அனுப்பி வைத்திருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பொது வைத்தியசாலைச் சபையின் தலைவரது வலாகத்திற்குப் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சம் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) சகல நிலையான சொத்துக்களையும் நேரடியாக இனங்கண்டு அவற்றின் பெறுமதியை மதிப்பீட்டு பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை உள்ளடக்கிய கணணி அச்சிடல் பதிவேட்டில் கட்டிடத் திருத்துவதற்கான மீளாய்வாண்டுச் செலவினத் தொகையாகிய ரூபா 39,157,304 சேர்த்துக்கொள்ளப்படாமை. |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | மருந்துப் பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்கள் களஞ்சிம் போன்நேற உப களஞ்சியங்களது கையிருப்பும் பதிவேடுகளும் நாளது வரையாக்கப்படும் பேணப்படாததுடன், கையிருப்புப் பெறுவனவு, வழங்கல் மற்றும் கையிருப்பு மீதி என்பவற்றைப் பிழையின்றிக் கணக்கிலிடும் விதிமுறையைக் கணகி முறைமையில் அறிமுகஞ் செய்து வைத்தியசாலையால், வைத்தியசாலையின் 5 பிரிவுகளில் உள்ள 350 சத்திர சிகிச்சை பொருட்களது கிரயம் கணணி முறைமையில் உள்ளடக்காமை, கையிருப்புக்களது நேரடிச் சபி, பிழை பார்த்தல் அறிக்கைகளில் புள்ளி விபரங்களைப் பென்சிலால் குறித்துக் கொண்டன மற்றும் அவற்றின் பிழையற்ற தன்மையைச் சான்றுறுதிப்படுத்தாமை, பிரதான களஞ்சியப் பொறுப்பாளர் களஞ்சியக் கையிருப்புச் சரி, பிழை அறிக்கைகளில் தமது கையெழுத்திட்டிராமை. |
| (இ) பதவியணி நிர்வாகம் | ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, தரப்படுத்தல் மற்றும் சம்பள அளவுத் திட்டம் போன்றவற்றிற்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அவற்றை அங்கீகரித்துக் கொண்டிருக்காமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த நிர்வாகத்தின் பொருட்டு நிரந்தர கண்காணிப்பும் மேற்பார்வையையும் மேற்கொள்ளப்படாமை |
| (உ) பொருட்டு கொள்வனவுக் கட்டுப்பாடு | தேவைகளை இனங்கண்டு கொள்வனவுகளை மேற்கொள்ளாமை, நிபந்தனைப் பிரகாரம் --- செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) கணணிக் கணக்கீட்டு முறைமை | நாட்குறிப்பு இலக்கம், குறியீடு, விபரம் என்பவற்றை முறைமையில் பத்திரிகை, இரட்டைக் குறிப்புப் பதிவினது விபரத்தை பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடாமை. |